**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**காட்டுமன்னார்கோயில்.**

**சி.சி. 34/2014**

அ.சா.11 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கலைவாணன் | **ஊர்** | செட்டிக்கட்டளை |
| தந்தை **பெயர்** | கலியமூர்த்தி | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **49** | **மாவட்டம்** | |
| **தொழில்** | டெய்லர் கடை | | |
| **காவல் நிலையம்** | புத்தூர் **காவல்நிலையம்** | | |

**The Oaths Act** 1969 (**Act** 44/1969)–**ன் விதிமுறைகளின் படி** 21.04.2025 **நாளாகிய இன்று திரு. M.Sam Eugine Jebakumar, B.E.,B.L., காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் செட்டிக் கட்டளை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். பட்டியல் சாட்சி ராஜ்மோகனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. இந்த கையெழுத்தை நான் இறந்த நபரின் சடலத்தை எடுக்கும்போது கையொப்பம் இட்டேன். நான் நெடுஞ்சேரி புத்தூரில் கடை வைத்திருக்கிறேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரை சேர்ந்த பையன் ஒருவர் அடிபட்டு இறந்தவிட்டதாக தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு நானும் சென்று பார்த்தேன். அப்போது ஒரு பையன் ரோட்டு ஓரமாக இறந்து கிடந்தார். என்னிடம் இறந்த அந்த பையன் எங்கள் ஊரைச் சேர்ந்தவரா என காவல்நிலையத்தில் இருந்து

வந்தவர்கள் கேட்டார்கள். அந்த பையன் எங்கள் ஊரை சேர்ந்தவர் அல்ல. பக்கத்து ஊரைச் சேர்ந்தவர் என்ற தகவலை சொன்னேன். சாட்சியாக கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் சாட்சி கையொப்பம் போட்டேன். என்னுடன் ராஜ்மோகன் என்பவரும் கையொப்பம் இட்டார். போலீசார் அந்த இடத்தில் சில படம் போட்டு பதிவு செய்து கொண்டார். சம்பவ இடத்தில் வைத்து மேலே கூறப்பபட்டவாறு போலீசார் விசாரித்தனர். பார்வை மகசரில் உள்ள என்னுடைய 2 வது கையொப்பம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்தவர் உடல் இருக்கும்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான். அப்போது மதியம் 2.00 மணி இருக்கும் என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் கவனிக்கவில்லை. இறந்த நபர் எங்கள் ஊர் காரர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டு விட்டு இப்போது போலீசாருக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.